மன்னிப்பவர் மகானாகிறார்; மனிதருள் மாணிக்கமாகிறார். (மேசையைத் தட்டும் ஒலி) இவ்விளைஞர்களுக்குப் புது வாழ்வு, புனர் வாழ்வு தந்திட்ட நம்முடைய மாண்புமிகு முதல்வர் அம்மாவோ தெய்வமாகிறார். (மேசையைத் தட்டும் ஒலி) கொல்கத்தாவிலே அன்னை தெரசாவின் திருக்கரங்கள் பட்டவுடன் மருத்துவர்களால் கைவிடப்பட்ட நோயாளியும் மீண்டுவந்த காரணத்தினால், அன்னை தெரசாவுக்கு 'புனிதர் பட்டம்' வழங்கப்பட்டது என படித்துள்ளேன். தூக்குக் கயிறு முத்தமிட இருந்த மூன்று இளைஞர்களின் உயிர்கள் மீட்டெடுக்கப்பட்டு, மன உளைச்சல், மனச் சிதைவு, மனம் பேதலிப்பு, அச்சம் என்னும் நோய்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அளிக்கும் சிகிச்சையாக விடுதலை என்னும் சுவாசக் காற்றை அளித்த, புது வாழ்வை அளித்த நம்முடைய மாண்புமிகு அம்மா அவர்கள் புனிதராவார். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்களுக்கு அனைத்துத் தமிழ் நெஞ்சங்களின் சார்பில் என் நன்றியைக் காணிக்கையாக்குகிறேன். நன்றி.

முற்பகல் 11-20

4. அறிக்கைகள் அளித்தல்

மனுக்கள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குழுவின் அறிக்கைகள் அளித்தல். மனுக்கள் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு அரசுத் தலைமைக் கொறடா, மனுக்கள் குழுத் தலைவர்.

திரு. ஆர். மனோகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரக்கத்தின் வடிவமே! தாய்மையின் உறைவிடமே! தழும்பாத நிறைகுடமே! எங்கள் இந்திய அரசியலின் ஜனநாயகத்தின் பிறப்பிடமே! வரும் நாடாளுமன்றத்தின் நாடியே! தங்க மனமும், சிங்க இதயமும் கொண்ட எழுச்சியின் வடிவமே! காலத்தே பெய்த மழையாய், கனிக்குள்ளே நிறைந்திருக்கும் அருஞ்சுவையாய், ஞாலமே போற்றுகின்ற அருள் வடிவாய், தமிழ்த் தாயின் தலைமகளாய், தமிழ்நாட்டை ஆட்சி செய்யும் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பாரதத் தாயின் செல்ல மகளாய், இந்தியத் திருநாட்டை ஆட்சி செய்வீர்கள்.

2014 பிப்ரவரி 19] [திரு. ஆர். மனோகரன்]

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2013-2014 ஆம் ஆண்டிற்கான மனுக்கள் குழுவின் 36 முதல் 39 வரையிலான நான்கு அறிக்கைகளை குழுவின் சார்பாக இப்பேரவைக்கு அளிக்கிறேன்.

5. வரவு–செலவுத் திட்டம், 2014–2015, பொது விவாதம்—*தொடர்ச்சி*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2014-2015 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையின்மீது பொது விவாதம். மாண்புமிகு உறுப்பினர் திருமதி பி. சரோஜா அவர்கள்.*

***திருமதி பி. சரோஜா:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கழகத்தின் நிரந்தரப் பொதுச் செயலாளர், ஏழரைக் கோடி தமிழ் நெஞ்சங்களில் நீங்கா இடம் பெற்றும், ஒன்றரைக் கோடி தமிழகத் தொண்டர்களின் உயிர் மூச்சாகவும் விளங்குகின்ற (மேசையைத் தட்டும் ஒலி) எங்கள் குடும்ப தெய்வம், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து வணங்கி, இந்நிதிநிலை அறிக்கையின்மீது எனது கன்னிப் பேச்சைத் தொடங்குகின்றேன்.*

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் இயக்கத்தோடு தன்னை அர்ப்பணித்துக்கொண்டு, கழகமே கோயில், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மாவே தெய்வம் என வாழ்ந்து வந்த எனது கணவர் திடீரென இயற்கை எய்தினார். இருளில் மூழ்கி, செய்வதறியாது நிலைகுலைந்து நான் நின்றிருந்த வேளையில், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மாவே நேரில் வந்து ஆறுதல் அளித்து, "நான் இருக்கின்றேன்" என்றதோடு, என்னை இந்த அவையிலும் (மேசையைத் தட்டும் ஒலி) அமரச் செய்து, எனது கணவர் விட்டுச் சென்ற தொகுதி மக்களின் பணியினைத் தொடர மாபெரும் வாய்ப்பளித்த இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு என் குடும்பத்தின் சார்பாகவும், தொகுதி மக்களின் சார்பாகவும் எங்களது நெஞ்சார்ந்த நன்றியினைக் காணிக்கை ஆக்குகின்றேன்.

மாண்புமிகு அம்மா அவர்களின் மாபெரும் மக்கள் சக்தியால், ஏற்காடு சட்டமன்ற இடைத் தேர்தலில் 78,116 வாக்குகள் வித்தியாசத்தில் என்னை வெற்றிபெற வைத்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த வெற்றி, மாண்புமிகு அம்மா அவர்களின்